## நகராட்சி நிர்வாகம்
## மற்றும்
## குடிநீர் வழங்கல் துறை





# காஞ்சிபுரம் மாநகராட்சி

## நிதி நிலை அறிக்கை

## அறிவிப்புகள்
## 2025-2026

# நகராட்சி நிர்வாகம்
# மற்றும்
# குடிநீர் வழங்கல் துறை

## மாண்புமிகு. மேயர், அவர்களின்
## தொடக்க உரை

# மூ. மகாலட்சுமி, B.E.,MBA.,
## காஞ்சிபுரம் மாநகராட்சி

# 2025–2026 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்தான விவர அறிக்கை

## கல்வி

### 1. காஞ்சிபுரம் மாநகராட்சியில் பள்ளிக் கட்டடங்கள், வளாகங்களை நவீனப்படுத்தி மேம்படுத்துதல் மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் அறைகளில் தனிக்கழிவறைகள் அமைத்தல்

அறிவிப்பு:– காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு சொந்தமாக 49 பள்ளிகள் உள்ளன. இதில் 25 தொடக்கப் பள்ளிகள், 12 நடுநிலை பள்ளிகள், 8 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 4 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இதில் 5316 மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். இவ்வனைத்து பள்ளிகளுக்கும் மாநகராட்சியின் தனித்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தும் விதமாக ஒரே சீரான **வண்ணத்தில் வர்ணம் பூசுதல் மற்றும் மாநகராட்சியின் இலட்சியுடன் பெயர் பலகை அமைத்தல்,** அவற்றில் முன்மாதிரியாக குறிப்பிடத்தக்க அளவில் பள்ளி மாணவர்கள் பயிலக்கூடிய பள்ளிகளின் முகப்பினை

நவீன முறையில் நுழைவாயில் அமைத்தல், பள்ளி மாணவர்களுக்கு தேவையான மேசை, நாற்காலிகள் மற்றும் அனைத்து பள்ளி கட்டடங்களிலும் மேற்கூரையில் நவீன Coolent Tiles பதித்தல், மின்சாதன பழுது சீரமைத்தல், கழிவறைகள் மேம்பாடு, குடிநீர் வசதிகள், பள்ளி சமையற்கூடங்கள் புதுப்பித்தல் உள்ளிட்ட அனைத்து விதமான சீரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் இடம் உள்ள மாநகராட்சி பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் அறைகளில் தனிக் கழிவறைகளும், ஆசிரியர்களுக்கென தனி கழிவறைகளும் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

இதற்கு ரூ.658.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

## 2. காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மாநகராட்சி பள்ளிகளிலும் புதிதாக Ceramic Boards மற்றும் Electrical Bells அமைத்தல்.

**அறிவிப்பு:-** மாநகராட்சியின் அனைத்து பள்ளிகளிலும் தற்போதுள்ள கரும்பலகை எழுது பலகைகளுக்கு **(Writing Board)** மாற்றாக புதியதாக **Ceramic Boards** மற்றும் **Electrical Bells** அமைத்தல் பணி மேற்கொள்ளப்படும்.

இதற்கு ரூ.22.10 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

## 3. காஞ்சிபுரம் மாநகராட்சி பள்ளிகளின் விளையாட்டுத்திடல் மேம்படுத்துல்.

**அறிவிப்பு:–** இராணி அண்ணாதுரை மேல்நிலைப் பள்ளி, டாக்டர் சீனிவாசன் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றின் விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துதல் மற்றும் பள்ளி வளாகத்தில் மழைநீர் தேங்காவண்ணம் கால்வாய் அமைத்தல் மற்றும் மேற்கண்ட பள்ளிகளுடன் கே.வி.கே. மாநகராட்சி நடுநிலைப் பள்ளியிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் பெரு நிறுவனங்களின் பங்களிப்புடன் (CSR) புதியதாக விளையாட்டு மைதானம் அமைத்தல், உபகரணங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் விளையாட்டுத்திடல் மேம்படுத்துதல்.

இதற்கு ரூ.60.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

## 4. காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட அங்கன்வாடிகள் புனரமைத்தல்.

அறிவிப்பு:– மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 88 எண்ணிக்கையிலான அங்கன்வாடிகள் செயல்படுகின்றன. மேலும் இதில் 57 எண்ணிக்கையிலான அங்கன்வாடிகள் மாநகராட்சிக்கு சொந்த கட்டடங்களில் இயங்கிவருகின்றன. இந்த அங்கன்வாடி மையங்கள் அனைத்தையும் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் வாடகை கட்டடத்தில் செயல்படும் அங்கன்வாடிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்கு ரூ.110.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

## 5. அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் தூய்மை பணியாளர்கள் பணி அமர்த்துதல்

**அறிவிப்பு:-** அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை பேணிகாக்கும் வகையில் தனித்தனியாக மாநகராட்சி நிரந்தர தூய்மை பணியாளர்கள் அல்லது வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாளர்களை பணியமர்த்த நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்கு ரூ.100.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

## 6. மாநகராட்சி பள்ளிகளில் Smart Class உபகரணங்களை பராமரித்தல்.

அறிவிப்பு:- மாநகராட்சி பள்ளிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலும் மற்றும் மாநகராட்சி நிதியிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ள Smart Class உபகரணங்களை பராமரிக்க ஆண்டு பராமரிப்பு (AMC) தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும்.

இதற்காக ரூ.25.00 இலட்சம் 2025-26ம் ஆண்டிற்கு கல்வி நிதியில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

## 7. பள்ளி மேம்படுத்துதல் திட்டத்தில் (School Improvement Scheme) புதிய வகுப்பறைகள் கட்டுதல்.

**அறிவிப்பு:–** மாநகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் மாணவர்களின் நலன் கருதி **பள்ளி மேம்படுத்துதல் திட்டத்தின்கீழ் (School Improvement Scheme)** அரசின் திட்ட நிதியில் விஷ்ணு காஞ்சி மாநகராட்சி நடுநிலைப் பள்ளி (காமாட்சியம்மன் காலனி), டாக்டர் பி.எஸ். சீனிவாசா மேல்நிலைப் பள்ளி, இராணி அண்ணாதுரை மாநகராட்சி உயர்நிலை பள்ளி. தேனம்பாக்கம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி மற்றும் சி.எஸ்.எம். மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் புதியதாக 6 எண்ணிக்கை வகுப்பறை கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், பள்ளிகளில் பயன்பாடற்ற நிலையில் உள்ள கட்டடங்களை இடித்து அகற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்கு **ரூ.180.00 இலட்சத்தில்** அரசின் திட்ட நிதி பெற்று பனிகள் மேற்கொள்ளப்படும்.

## 8. மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பள்ளிகளிலும் கேமரா (CCTV) பொருத்தப்படுதல்.

அறிவிப்பு:- மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பள்ளிகளிலும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்யும் விதமாக புதியதாக ஒரு பள்ளிக்கு 4 முதல் 8 எண்ணிக்கைகள் கண்காணிப்பு கேமரா (CCTV) ஆண்டு பராமரிப்புடன் பொருத்தப்படும்.

இதற்கு ரூ.50.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்

## 9. மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் பழுதுகளை சரி செய்தல்.

**அறிவிப்பு:–** மாநகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் மாணவர்களின் நலன் கருதி பள்ளிகளில் உள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரம் (RO Plant), மின் சாதனங்கள், குடிநீர் குழாய்கள் மற்றும் கழிவறைகளில் அவ்வப்போது ஏற்படும் சிறு சிறு பழுதுகளை உடனடியாக சீர் செய்ய ஏதுவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்கு ரூ.50.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்

## 10. மாநகராட்சிக்குட்பட்ட பள்ளிகளுக்கு புதிதாக நகலெடுக்கும் வசதியுடன் கூடிய அச்சு இயந்திரங்கள் (Xerox cum Printers) வழங்குதல்.

**அறிவிப்பு:-** மாநகராட்சிக்குட்பட்ட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நகல் எடுக்கும் வசதியுடன் கூடிய அச்சு இயந்திரங்கள் (Xerox cum Printer) கொள்முதல் செய்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

இதற்கு ரூ.15.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்

KANCHEEPURAM CORPORATION ★ காஞ்சிபுரம் மாநகராட்சி ★

## 11. மாநகராட்சிக்குட்பட்ட தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் குழந்தைகள் பாதுகாப்பு குழு மற்றும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பாலின குழுக்கள் (Gender Club) அமைத்தல்.

**அறிவிப்பு:–** மாநகராட்சிக்குட்பட்ட தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் இம்மாநகர மாமன்ற உறுப்பினர்களை தலைவராக கொண்டு **குழந்தைகள் பாதுகாப்பு குழு அமைக்கவும்,** இக்குழு கூட்டத்தினை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

மேலும், மாநகராட்சியின் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு மற்றும் 9 ஆம் வகுப்புகளில் பயின்றுவரும் மாணாக்கர்களுக்கிடையே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் **பாலின குழுக்கள் (Gender Club)** அமைத்து மாணாக்கர்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

மாநகராட்சியின் **சத்துணவு பிரிவின்** மூலம் இக்குழுவின் நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

## 12. மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணாக்கர்கள் ஊக்குவிக்கும் வகையில் திடக்கழிவுகளை தரம் பிரிக்க விழிப்புணர்வு மேற்கொள்ளுதல்.

**அறிவிப்பு:-** மாநராட்சி பள்ளியின் மாணாக்கர்களின் சமூக நலனில் அவர்தம் பங்களிப்பினை ஊக்குவிக்கும் வகையில் குப்பைகளை மட்கும் மற்றும் மட்காத குப்பை என தரம் பிரித்து முறையாக அகற்றும் விழிப்புணர்வை வாரந்தோறும் பள்ளிகளிலேயே ஆசிரியர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலம் மாணாக்கர்களுக்கு கற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் பள்ளிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துதல்.

## 13. மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்கள் பொது தேர்வில் சிறப்பிடம் பெறுபவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்குவது.

**அறிவிப்பு:-** மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களிடையே 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களில் பொது தேர்வில் சிறப்பிடம் பெறுபவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கவும் மற்றும் தேசிய, மாநில, மாவட்ட அளவில் நடைபெறும் **கலை, கட்டுரை, விளையாட்டு, திறன் மேம்பாடு உள்ளிட்ட போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறுபவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழுடன் கூடிய ஊக்கத் தொகை வழங்கப்படும்.**

## 14. நூலகம் மற்றும் அறிவுசார் மையம் மேம்படுத்துதல்.

அறிவிப்பு:– மாநகராட்சிக்குட்பட்ட டாக்டர் பி.எஸ். சீனிவாசா பள்ளி வளாகத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டப்பட்டு தற்போது நாள்தோறும் சுமார் 200 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். மேலும், அறிவுசார் மையத்தில் தனியார் / தன்னார்வ தேர்வு பயிற்சியாளர்கள் மூலம் கட்டணமற்ற பயிற்சிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், மாணவர்கள் மற்றும் பயனாளிகளின் நலன் கருதி கூடுதலாக 100 மாணவர்கள் பயன்பெறும் வகையில் அறிவுசார் மையத்திற்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல், கணிணிகள், கண்காணிப்பு கேமராக்கள், தொடுதிரை கணிணி (Digital Smart Board) ஆகியவற்றினை ஆண்டு பராமரிப்பு(AMC) மேற்கொள்ளுதல் மற்றும் மையத்திற்கு தேவையான சுகாதார பணியாளர்கள் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.

இதற்கு ரூ.60.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

## பொது சுகாதாரம்

### 15. நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு (UPHC) Invertors கொள்முதல் செய்தல்.

**அறிவிப்பு:-** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் 10 எண்ணிக்கையிலான நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பொதுமக்கள் நலன் கருதி அவசரக்கால மருத்துவ சேவையினை கருத்தில் கொண்டு **10 எண்ணிக்கையிலான Invertors** கொள்முதல் செய்து வழங்கப்படும்.

இதற்கு ரூ. 20.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

மேலும், மாநகராட்சியில் செயல்படும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் (NUHM) திட்டத்தின்கீழ் அல்லது பொது நிதியின்கீழ் இருக்கை வசதியுடன் கூடிய **காத்திருப்போர் கூடம்** அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்கு ரூ.50.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

## 16. தெரு நாய்களை கணக்கெடுத்தது கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல் மற்றும் கூடுதல் கருத்தடை மையம் அமைப்பது.

**அறிவிப்பு:–** மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு நாய்களை கட்டுப்படுத்துவதற்கு நவீனமுறையில் அனைத்து தெரு நாய்களும் கணக்கெடுக்கவும், அவற்றிற்கு கருத்தடை செய்வதுடன், காயமடைந்த மற்றும் ஆதரவற்ற விலங்குகளுக்கு பாதுகாப்பகம் அரசு வழிகாட்டுதலை பின்பற்றி தொண்டு நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் ஏற்படுத்தப்படும்.

மேலும், சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகள், பன்றிகள் மற்றும் இதர கால்நடைகளை பிடிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்கு ரூ.50.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

மேலும், இம்மாநகராட்சியில் நத்தப்பேட்டை உரக்கிடங்கு பகுதியில் தற்போது செயல்பாட்டில் உள்ள நாய் கருத்தடை மையம் 20 நாய்களுக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கும் வகையில் உள்ளதால், கூடுதல் கட்டடம் அவசியமாகிறது.

இதற்கு ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசின் திட்ட நிதி பெற்று நாய் கருத்தடை மைய கட்டடம் கட்டப்படும்.

## 17. மாநகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்.

அறிவிப்பு:– தூய்மை இந்தியா திட்டத்தில் உத்யாமி (SBM–UDYAMI) திட்டத்தின்கீழ் பாதாள சாக்கடை திட்டத்தில் பணிபுரியும் மற்றும் Septic Tank Operators மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு தேவையான அடிப்படை தூய்மை உபகரணங்கள், Jet Rodding, Suction Machine கொள்முதல் செய்திட மானியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

மேலும், மாநகராட்சியின் பொது சுகாதார பணியாளர்களுக்கு தனியார் தொண்டு நிறுவனம் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 18. முதிர் கொசு ஒழிக்கும் பணிக்கு வாகனத்துடன் கூடிய கொசு ஒழிப்பு புகை பரப்பும் இயந்திரம் (Vehicle Mounted Fogging Machine) மற்றும் கொசுப்புழு அழிப்பதற்கு எட்டு எண்ணிக்கை Power Sprayers கொள்முதல் செய்தல்.

அறிவிப்பு:– இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள கால்வாயில் உருவாகும் கொசுப் புழுக்களை அழிப்பதற்கு கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கு 8 எண்ணிக்கை **Power Sprayer** மற்றும் முதிர் கொசு ஒழிக்கும் பணிக்கு 4 எண்ணிக்கை கொசு ஒழிப்பு புகை பரப்பும் இயந்திரம் மற்றும் அதற்கான வாகனங்கள் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

இதற்கு ரூ.60.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

## 19. காஞ்சிபுரம் மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் பொது சுகாதார பணியாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்தல்.

அறிவிப்பு:- மாநகரை தூய்மையாக பராமரிக்கும் மிக முக்கிய பணிகளை மேற்கொள்ளும் தூய்மை பணியாளர்கள் மற்றும் பொது சுகாதார பணியாளர்களின் உடல் நலனை பேணிகாக்கும் வகையில் அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் முழு உடல் பரிசோதனையினை காஞ்சிபுரம் மாநகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்படும். அதற்காகும் செலவினத்தை மாநகராட்சியின் பொது நிதியின்கீழ் வழங்கப்படும்.

## 20. தூய்மை பணியாளர்களுக்கு கடனுதவி பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது The Micro Credit Finance (MCF) For Cleanliness Workers

**அறிவிப்பு:-** மாநகராட்சியில் பணிபுரியும் தனியார் தூய்மை பணியாளர்களுக்கு அரசின் வழிகாட்டுதலின்படி தாட்கோ (TAHDCO) துறையுடன் இணைந்து அவர்கள் வாழ்வாதாரம் மேம்படுத்த ரூ.50,000/- முதல் ரூ.5,00,000/- வரை அரசு மானியத்துடன் கூடிய குறைந்த வட்டியில் கடனுதவி மற்றும் முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டம் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தனியார் தூய்மை பணியாளர்கள் 50 நபர்கள் கொண்ட TAHDCO – Tamil Nadu Cleanliness Workers Advancement Society (TNCWAS) ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டமானது National Safai Karamcharis Finance and Development Corporation (NSKFDC) நிதியுதவியுடன் மாநில அரசின் TAHDCO துறை ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டில் தனியார் தூய்மை பணியாளர்கள் 300 நபர்கள் பயன்பெற உள்ளனர். இத்திட்டத்தில் ரூ.150.00 இலட்சத்திற்கு பயன்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 21. புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் (Urban Health and Wellness Centre) கட்டுதல்.

அறிவிப்பு:– மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 19 எண்ணிக்கையிலான நகர்ப்புற சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையம் அமைத்திட உரிய திட்ட அறிக்கை தயார் செய்து NUHM திட்டத்தின்கீழ் அரசின் நிதியுதவி கோரி அரசுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் கட்டப்படும்.

இதற்கு ரூ.475.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

## 22. தூய்மை பணியாளர்களுக்கு சிற்றுண்டி மற்றும் தேநீர் வழங்குதல்

அறிவிப்பு:–மாநகராட்சியில் பணிபுரியும் நிரந்தர மற்றும் தனியார் தூய்மை பணியாளர்களுக்கு காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்கவும் மற்றும் இரவு நேரத்தில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு புத்துணர்ச்சி அளிக்கும் விதமாக தேநீர் வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

KANCHEEPURAM CORPORATION ★ காஞ்சிபுரம் மாநகராட்சி ★

## நகரமைப்பு

### 23. சாலையோர வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு அடையாள அட்டை மற்றும் வியாபாரம் செய்யும் பகுதியினை ஒழுங்குப்படுத்துதல்.

**அறிவிப்பு:–** மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலையோரங்களில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளை கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு Bio Metric அடையாள அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் மற்றும் Tamil Nadu Street Vendors Livelihood & Rehabilitation and Regularization Rules 2017 இன்படி சாலையோரம் வியாபாரம் செய்யும் பகுதி, வியாபாரம் செய்ய தடை செய்யப்பட்ட பகுதி என பிரிக்கப்பட்டு சாலையோர வியாபாரம் ஒழுங்குபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

## 24. திடக்கழிவு சேகரிப்பவர்கள் மற்றும் வீடற்றவர்களை கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.

**அறிவிப்பு:–** மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குப்பை சேகரிப்பவர்கள் (Rag Pickers), யாசகம் பெறுபவர்கள் மற்றும் திருநங்கைகள் ஆகிய விளிம்புநிலை நபர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் கீழ் SMILE (Support for Marginalized Individuals for Livelihood Enterprise) திட்டத்தில் மேற்படி நபர்களின் மறுவாழ்வு அளித்தல், மருத்துவ வசதி, ஆலோசனைகள், கல்வி, திறன் மேம்பாடு, பொருளாதாரம் மேம்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் இம்மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின்கீழ் இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிச்சைக்காரர்கள் மற்றும் ஆதரவற்ற வீடற்றவர்களை கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு மறுவாழ்வு அளித்திட வீடற்றவர்களுக்கான தங்கும் விடுதி கட்டி அவர்களை தொண்டு நிறுவனங்கள் மூலம் பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தில் மத்திய அரசின் நிதி ரூ. 150.00 இலட்சத்தில் தங்கும் விடுதி கட்டப்படும்.

# பொறியியல் பிரிவு

## 25. சாலை சீரமைப்பு

அறிவிப்பு:- காஞ்சிபுரம் மாநகராட்சியில் வடகிழக்கு பருவமழையின்போது சேதமடைந்த சாலைகளை சீரமைக்க தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2024-25-ன் கீழ் ரூ.170.00 இலட்சத்திற்கும், மாநில பேரிடர் நிவாரண நிதி திட்டத்தின் கீழ் ரூ.1421.00 இலட்சத்திற்கும் மற்றும் மண் சாலைகளை தார் சாலைகளாக தரம் உயர்த்தவும் மற்றும் தற்போது நடைபெற்று வரும் புதை வடிகால் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளில் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைக்க ஏழு சிப்பங்களாக ரூ.643.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்து அரசு நிதி கோரி பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 26. காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு புதிதாக அண்ணா அரங்கம், வணிக வளாகத்துடன் கூடிய பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் கட்டுதல்.

அறிவிப்பு:- மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா அரங்கம் உள்ள இடத்தில் பொதுமக்கள் பங்களிப்புடன் (PPP) ஏற்கனவே உள்ள அரங்கத்தினை இடித்துவிட்டு புதியதாக அண்ணா அரங்கம், வணிக வளாகத்துடன் கூடிய பன்னடுக்கு வாகன நிறுத்து டம் கட்ட அரசின் அனுமதி கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளபடும். இதற்கு ரூ.600.00 இலட்சத்தில் தனியார் பங்களிப்புடன் DBFOT–Design Build Finance Operate and Transfer என்ற முறையில் பணி மேற்கொள்ளப்படும்

## 27. காஞ்சிபுரம் மாநகராட்சியில் தற்போது உள்ள நடைமுறையில் குடிநீர் மற்றும் புதை வடிகால் வழிகாட்டு நெறிமுறைகள் புதியதாக மேம்படுத்துதல்.

அறிவிப்பு:- மாநகராட்சியின் தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் மற்றும் புதை வடிகால் இணைப்புகளின் வழிகாட்டு நெறிமுறைகள் மாற்றம் செய்து புதிய திருத்திய கட்டணங்களுடன் வழிகாட்டு நெறிமுறைகள் ஏற்படுத்தி இம்மாநகராட்சியின் வருவாயை பெருக்கும் விதமாக நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

மேலும் இம்மாநகராட்சியில் தற்போது பயன்பாட்டில் உள்ள புதைவடிகால் அமைப்பு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை மேம்படுத்துவதற்கு ஏதுவாக **TNUIFSL** நிதியுதவியுடன் **InfraEN** என்ற கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டு தொழில்நுட்ப கள ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசின் நிதி ஒதுக்கீடு பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 28. மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காவினை பொது மக்கள் பயன்பெறும் வகையில் மேம்படுத்துல்.

**அறிவிப்பு:–** மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பூங்காக்களை மறுசீரமைப்பு செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஏதுவாக **வெளிப்புற உதவிகள் திட்டம் (KFW)** மற்றும் **அம்ரூத்** ஆகிய திட்டத்தின்கீழ் 5 பூங்காக்களை மேம்படுத்த ரூ.319.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசின் நிதியுதவி கோரி கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், **அறிஞர் அண்ணா நூற்றாண்டு பூங்காவினை** பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் மேம்படுத்துதல் மற்றும் புதியதாக குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் பொருத்துதல் மற்றும் **பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் பூங்காவினை பராமரிக்க முன்னாள் படை வீரர்களை நியமித்து ரூ.100.00 இலட்சத்தில் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.**

மேலும், இதர பூங்காக்களை புதுப்பித்து மற்றும் பராமரிக்க அந்தந்த பகுதியின் குடியிருப்போர் நலச்சங்கத்திடம் ஒப்படைக்கவும் மற்றும் பெரு நிறுவனங்களின் பங்களிப்புடன் Outsourcing பணியாளர்களை நியமனம் செய்து பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

## 29. மாநகராட்சிக்குட்பட்ட ஏரிகளை புனரமைத்து நீர்த்தேக்கும் பகுதியாக உருவாக்குதல்.

**அறிவிப்பு:–** மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஏரிகள் மற்றும் குளங்களை புனரமைக்கும் பணி மேற்கொள்ள **வெளிப்புற உதவிகள் திட்டம் (KFW)** மற்றும் **அம்ரூத்** ஆகிய திட்டத்தின்கீழ் **இரண்டு** ஏரிகள் **மற்றும் இரண்டு குளங்களை ரூ.116.90 இலட்சத்தில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசின்** நிதியுதவி கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**அல்லாபாத்** ஏரியினை புனரமைத்து நீர்த்தேக்கும் பகுதியாக உருவாக்கிட **EX–NO–RA International** தொண்டு நிறுவனத்தின் CSR நிதியின் மூலம் Excavator வாகனம் பெறப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி அல்லாபாத் ஏரி மற்றும் பிற நீர் நிலைகளை சீரமைத்து தினசரி எரிபொருள், ஓட்டுநர் / இயக்குநர் மற்றும் வாகன பராமரிப்பு செலவினை பொது நிதியில் பணி மேற்கொள்ளப்படும்.

மாநகராட்சிக்குட்பட்ட **வெள்ளக்குளம்** மற்றும் **ஒக்கபிறந்தான்** குளத்தினை புனரமைத்து பொதுமக்கள் நடைபயிற்சி மேற்கொள்ளும் விதமாக நடைபாதை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

**இதற்கு ரூ.300.00 இலட்சத்தில் அரசின் திட்ட நிதியில்** செலவினம் மேற்கொள்ளப்படும்.

## 30. அன்னை அஞ்சுகம் திருமண மண்டப கூடுதல் பணிகள்.

**அறிவிப்பு:-** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்திருந்த **அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தினை** இடித்துவிட்டு புதியதாக நவீன வசதிகளுடன் **மூலதன மானிய நிதியில் (Capital Grant Fund)** திருமண மண்டபம் ரூ.877.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. மேற்படி திருமண மண்டபம் கட்டுவதற்கு வழங்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லாத காரணத்தினால் கூடுதலாக ரூ.1000.00 இலட்சம் வழங்கக் கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசின் திட்ட நிதி பெற தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 31. தாட்டித்தோப்பு முருகன் குடியிருப்பு மற்றும் காவலன் கேட் – உத்திரமேரூர் சாலை இணைப்பு பாலங்களுக்கு அனுகுபாதை அமைத்தல்.

அறிவிப்பு:– மாநகராட்சிக்குட்பட்ட தாட்டித்தோப்பு– முருகன் குடியிருப்பு பகுதியில் இருந்த தரைப்பாலம் பெருவெள்ள மழையினால் சேதமடைந்ததை தொடர்ந்து புதியதாக மேம்பாலம் அமைக்க மூலதன மானிய நிதியில் (Capital Grant Fund) திட்டத்தின்கீழ் ரூ.229.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. மேற்படி பாலம் கட்டுவதற்கு வழங்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லாத காரணத்தினாலும், பாலத்தின் இருபுறமும் கூடுதலாக அனுகு சாலை அமைக்க ரூ.150.00 இலட்சம் 6–வது மாநில நிதிக்குழு திட்டத்தில் வழங்கக் கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநகராட்சிக்குட்பட்ட வேகவதி ஆற்றின் குறுக்கே காவலன் கேட் – உத்திரமேரூர் சாலை இணைக்க புதியதாக மேம்பாலம் **மூலதன மானிய நிதியில் (Capital Grant Fund)** திட்டத்தின்கீழ் அமைக்க ரூ.500.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், பாலத்திற்கு இருபுறமும் கூடுதலாக அனுகு **சாலை** அமைக்க ரூ.300.00 இலட்சம் **6–வது மாநில நிதிக்குழு திட்டத்தில்** வழங்கக் கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 32. காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு புதிய அலுவலக கட்டடம் கட்டுதல்

**அறிவிப்பு:–** காஞ்சிபுரம் மாநகராட்சியின் பயன்பாட்டில் இருந்த அலுவலக கட்டடத்தினை இடித்துவிட்டு புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய அலுவலக கட்டடம் சிறப்பு நிதி (Special Grant) திட்டத்தின்கீழ் ரூ.1000.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. மேலும் அலுவலகத்திற்கு உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தவும் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு தேவையான இருக்கை மற்றும் மின்சாதன வசதிகள் ஏற்படுத்திடவும் கூடுதலாக ரூ.1000.00 இலட்சம் நிதி வழங்கக் கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசின் திட்ட நிதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 33. மஞ்சள் நீர் கால்வாய் – புனரமைப்பு பணிகள்

**அறிவிப்பு:–** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட கைலாசநாதர் கோவில் முதல் நத்தப்பேட்டை ஏரி வரை செல்லும் மஞ்சள் நீர் கால்வாயில் கழிவுநீர் கலப்பதை தவிர்க்கவும், கால்வாயில் ஆக்கிரமிப்புகள் ஏற்படுத்துவதை தவிர்க்கவும் கால்வாயின் இருபுறமும் Infrastructure and Amenities திட்டத்தின்கீழ் ரூ.4000.00 இலட்சம் மதிப்பீட்டில் பக்கவாட்டு சுவர் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியில் கூடுதலாக கரையில் பாதாள சாக்கடை வழித்தடம் அமைக்கவும் மற்றும் இப்பணியினை மஞ்சள் நீர் கால்வாயின் முழு நீளத்திற்கும் அமைத்திடவும் தொய்வின்றி மேற்கொள்ள கூடுதலாக ரூ.1500.00 இலட்சம் நிதி வழங்கக் கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 34. புதியதாக தெருவிளக்குகள் அமைத்தல்

**அறிவிப்பு:–** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் **State Urban Infrastructure and Development Fund (SUIDF)** திட்டத்தின் கீழ் ஏற்கனவே பயன்பாட்டில் இருந்துவந்த கோடியும் ஆவி விளக்குகளுக்கு பதிலாக (**Conversion of LED**) புதியதாக 12276 எண்ணிக்கையில் **LED** மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து விடுபட்ட பகுதிகளில் புதியதாக 800 LED மின் விளக்குகள் பொருத்த **Infra Gap Filling** திட்டத்தில் கூடுதலாக ரூ.200.00 இலட்சம் நிதி வழங்கக் கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 35. மாநகராட்சியின் விடுபட்ட பகுதிகளுக்கு புதை வடிகால் வசதி ஏற்படுத்துதல்.

**அறிவிப்பு:–** இம்மாநகராட்சிக்குட்பட்ட செவிலிமேடு, நத்தப்பேட்டை, தேனம்பாக்கம் மற்றும் ஓரிக்கை பகுதிகளில் புதியதாக ரூ.400.00 கோடி திட்ட மதிப்பீட்டில் **Tamil Nadu Climate Resilient Urban Development Program (TNCRUDP)** புதை வடிகால் வசதிகள் ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்ட மதிப்பீட்டில் வார்டு எண்.25, 26, 28 மற்றும் 51 வார்டில் விடுபட்ட பகுதிகளிலும் ஆகியவற்றில் சில பகுதிகள் விடுபட்டுள்ளதால் அவைகளுக்கும் புதை வடிகால் வசதி ஏற்படுத்த ரூ.5000.00 இலட்சம் நிதி வழங்கக் கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 36. திறன் மேம்பாடு (Energy Audit)

**அறிவிப்பு:–** குடிநீர் திட்டம், பாதாள சாக்கடை பணிகளில் இயந்திரத்தில் மோட்டார்கள் மற்றும் மின்சாரத்தினை பெருமளவு பயன்படுத்தக்கூடிய Starter போன்றவற்றின் திறனை மேம்படுத்தவும், அனைத்து கட்டடங்களில் பயன்படுத்தப்பட்டு வரும் மின்சார பயன்பாட்டை குறைக்கும் வகையிலும் மின்சாதன பொருட்களின் திறனை மேம்படுத்தும் வகையிலும் Energy Audit மேற்கொள்ள உரிய தொழில்நுட்ப கலந்தாலோசகர் நியமித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 37. புதிய பேருந்து நிலையம் மற்றும் பேருந்து நிலைய மேம்பாடு

அறிவிப்பு:– சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையினை ஒட்டி காஞ்சிபுரம் வட்டம், காரைப்பேட்டை கிராம புல எண்.354/5,7 இல் 4.04.87 ஹெக்டேர்ஸ் பரப்பளவுள்ள நிலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க Infrastructure and Amenities திட்ட நிதியில் முன் நுழைவு அனுமதி ஆணை பெற்று விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கையில் உள்ளது. ரூ.35.00 கோடி மதிப்பீட்டில் அரசின் திட்ட நிதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

மேலும், தற்போதுள்ள அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தினை மூலதன மானிய நிதியில் ரூ.100.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகள் அரசின் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட உள்ளது.

## 38. புதிதாக கிரிக்கெட் வலைப்பயிற்சி மைதானம் (TURF) மற்றும் Badminton / Shuttle Court அமைத்தல்.

**அறிவிப்பு:–** காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட கே.வி.கே. நடுநிலைப் பள்ளி மற்றும் விஷ்ணு நகர் பகுதியில் காலியாக உள்ள இடத்தில் விளையாட்டு வீரர்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் கிரிக்கெட் வலைப்பயிற்சி மைதானம் (TURF) மற்றும் Batmitton / Shuttle Court – தனியாக பொதுமக்கள் பங்களிப்பில் (PPP முறையில்) ரூ.80.00 இலட்சத்தில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 39. பெண்களுக்கென உடற்பயிற்சி கூடம் (Pink Gym) அமைத்தல்.

அறிவிப்பு:- மாநகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு பூங்காவில் உள்ள உடற்பயிற்சி கூடத்தில் மேல் தளத்தில் புதியதாக பெண்களுக்கென உடற்பயிற்சி கூடம் (Pink Gym) ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 40. புதை வடிகால் பராமரிப்பு

**அறிவிப்பு:- 15-வது மத்திய நிதிக்குழு மானியம் மூலம் மாநகராட்சியின் புதை வடிகால் பராமரிப்பு பணிகளுக்கு புதியதாக ஒரு கழிவுநீர் அடைப்பு நீக்கும் வாகனம் (Jet Rodding), கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் (Super Sucker) மற்றும் 4 எண்ணிக்கை கசடுகளை அள்ளும் வாகனம் (De-Silting Auto) ஆகியவை ரூ.200.00 இலட்சத்தில் கொள்முதல் செய்யப்பட உள்ளது.**

## 41. மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி உருவாக்குதல்

காஞ்சிபுரம் மாநகராட்சியில் 51 வார்டுகளில் வசிக்கும் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு வார்டு மேம்பாட்டு நிதியினை 2025-2026 ஆம் நிதியாண்டு முதல் உருவாக்கி, அதற்கு ஆண்டிற்கு ஒவ்வொரு வார்டிற்கும் ரூ.10.00 இலட்சம் வீதம் பொது நிதியில் ஒதுக்கீடு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்காக ரூ.510.00 இலட்சத்தில் செலவினம் மேற்கொள்ளப்படும்.

## வருவாய் பிரிவு

42. காஞ்சிபுரம் மாநகராட்சியில் சொத்துவரி வசூலில் கடந்த 2023-24 ஆம் ஆண்டில் அதற்கு முந்தைய ஆண்டு வசூலைவிட 110 % கூடுதல் வசூல் செய்யாததால் இம்மாநகராட்சிக்கு மத்திய அரசிடமிருந்து வரப்பெற வேண்டிய 15th CFC மானியம் ரூ.1000.00 இலட்சம் வரப்பெறவில்லை.

நடப்பு 2024-2025 ஆம் நிதியாண்டில் கடந்த 2023-24 ஆம் வரி வசூலைவிட 111.20 % விட கூடுதலாக சொத்து வரி வசூல் இலக்கு எய்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இம்மாநகராட்சிக்கு 2025-26 ஆம் ஆண்டில் ரூ.1000.00 இலட்சம் 15th CFC மானிய நிதியாக எதிர்பார்க்கப்படுகிறது. மாநகராட்சியின் திருமதி. வண்ணமலர் இளவரசி, உதவி ஆணையர் (வ/நி) தலைமையிலான வருவாய் பிரிவினர் மற்றும் சொத்து வரி வசூலில் ஈடுபட்ட அனைத்து பிரிவு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை இம்மாமன்றம் பாராட்டுகிறது.

## மின் கட்டண நிலுவை

43. இம்மாநகராட்சியில் உள்ள 1620 மின் இணைப்புகளுக்கு மின் கட்டணம் ரூ.22.00 கோடி நிலுவையிலிருந்த நிலையில் ஒவ்வொரு மாதமும் மாநில நிதி குழு மானியத்தில் (SFC)–ல் மாதந்தோறும் ரூ.60.00 இலட்சம் முதல் ரூ.100.00 இலட்சம் வரை பிடித்தம் செய்து வந்த நிலையில், தற்போது அங்கீகரிக்கப்படாத மனைகளை வரன்முறைப்படுத்தும் கட்டணத்திலிருந்து ரூ.1300.00 இலட்சத்தினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கூடுதலாக அரசின் சிறப்பு நிதியாக O & M, CGF நிதியிலிருந்து ரூ.200.00 இலட்சம் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் மூலம் பெறப்பட்டும், மாநகராட்சியின் வரிவசூல் நிதி ஆதாரங்களை கொண்டும் நிலுவையின்றி செலுத்திட இம்மாநகராட்சி மூலம் முதற்கட்டமாக ரூ.1100.00 இலட்சம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மீதமுள்ள மின் கட்டண தொகையினை நிலுவையின்றி செலுத்திட மாநகராட்சியில் தொடர்ந்து மின் கட்டணம் நிலுவையில்லாத நிலை ஏற்படுத்திடவும், நடப்பாண்டிலிருந்து மின் கட்டணம் நிலுவையின்றி தொடர்ந்து மாதந்தோறும் செலுத்திடவும் ஆவண செய்யப்பட்டுள்ளது. மேலும், **அரசின் சிறப்பு நிதி உதவி வழங்கிய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கும் இம்மாமன்றம் நன்றி தெரிவிக்கிறது.**

## படைவீரர் கொடி நாள் நிதி

44. ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 7 ஆம் நாளை இலக்காக கொண்டு மறைந்த மற்றும் காயமடைந்த படை வீரர்களுக்கும், மறைந்த படை வீரர்களின் குடும்பத்திற்கும் உதவி செய்திட கொடி நாள் வசூல் செய்திட அரசு மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் இலக்கு நிர்ணயிக்கப்படுவதை பொது மக்களிடமிருந்து மாநகராட்சி மூலமாக வசூல் செய்து செலுத்தப்பட்டு வருகிறது. இதற்கு முன் எப்போதுமில்லாத வகையில் **2023-24 ஆம் ஆண்டிற்கு ரூ.6.50 இலட்சம்** இலக்காக நிர்ணயம் செய்திருந்த நிலையில், இம்மாநகராட்சி மூலம் **ரூ.13.50 இலட்சம்** வசூல் செய்து படை வீரர்கள் நிதியாக செலுத்தப்பட்டுள்ளது. இது தமிழ்நாடு அளவில் அனைத்து மாநகராட்சியை காட்டிலும் இம்மாநகராட்சி முதலிடம் பெற்றமைக்காக குடியரசு தினவிழாவில் 26.01.2025 **மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களிடமிருந்து** மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பாக சுழற்கோப்பையை பெற்றமைக்கு திரு. வே. நவேந்திரன், மாநகராட்சி **ஆணையர் அவர்களை** இம்மாமன்றம் பாராட்டுகிறது.

## முன்மாதிரி மற்றும் எதிர்காலத் திட்டங்கள் :–

45. TNCRUDP திட்டத்தின் கீழ் 2050 ஆம் ஆண்டினை எதிர்நோக்கி ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை NK Builder கலந்தாலோசகர் மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 25 TPD உணவுக் கழிவுகளிலிருந்து Bio Gas தயாரித்திட Bio Methanation Plant அமைத்தல், திடக்கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரித்தல், Waste to Energy Plant அமைத்திடவும், மரக்கழிவுகளை தீர்வாக்கம் செய்தல் உள்ளிட்ட அனைத்து விதமான கழிவுகளுக்கும் பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் வளர்ந்து வரும் சுற்றுலா பெருக்கத்தையும் கருத்திற்கொண்டு திட்டமிட்டு அரசின் நிதி உதவி பெற்று திடக்கழிவு மேலாண்மை பணிகளை 100 % திறம்பட செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

46. மத்திய அரசின் Digital India திட்டத்தின் ஒரு பகுதியாக NAKSHA (நகர்ப்புற நிலப் பதிவுகளை நவீனமயமாக்குவதற்காக நகர்ப்புற வாழ்வினங்களின் தேசிய புவிசார் அறிவு அடிப்படையிலான நில ஆய்வு) திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாநகராட்சியின் அனைத்து நகர புல எண்களையும், (கட்டடங்கள் உட்பட) ட்ரோன் சர்வே மேற்கொள்ளும் பணி செயல்படுத்தப்பட உள்ளது. கள ஆய்வு செய்யப்படும் விவரங்களுடன் நகர புல எண்கள் ஒத்திசைவு செய்து Geo Tag Digitilized Land Survey Records உருவாக்குதல் திட்டம் மத்திய அரசின் நிதி உதவியுடன் மாநில நில அளவை துறையுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும்.

47. <u>CUMTA:–</u> காஞ்சிபுரம் மாநகராட்சியில் நகர போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைத்து, திறமையான மற்றும் நிலைத்துணை போக்குவரத்து வசதிகளை பொது மக்களுக்கு ஏற்படுத்த CUMTA (The Chennai Unified Metropolitan Transport Authority) திட்டத்தின் கீழ் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

48. மாநகராட்சியில் புதியதாக திட்டங்கள் மற்றும் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக விரிவான திட்ட அறிக்கை மற்றும் முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு TNUIFSL நிறுவனத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

49. மாநகராட்சிக்குட்பட்ட 51 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 100% மட்கும் குப்பை, மட்காத குப்பை என தரம் பிரித்து குப்பைகளை அறிவியல் பூர்வமாக தீர்வாக்கம் (Scientific Waste Management) ஏதுவாக மாநகராட்சியின் 10 வார்டுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு முன்மாதிரி வார்டுகளாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## பிற துறைகள் :-

50. நத்தப்பேட்டை ஏரி மற்றும் தேனம்பாக்கம் ஏரியினை புனரமைத்து பறவைகள் சரணாலயம் அமைக்க ஏதுவாக உரிய திட்ட அறிக்கை தயார் செய்து அரசுக்கு நிதியுதவி கோரி நடவடிக்கை மேற்கொள்ள பொதுபணித் துறையை (நீர்வளம்) இம்மாமன்றம் கோருகிறது.

KANCHEEPURAM CORPORATION
காஞ்சிபுரம் மாநகராட்சி

51. 2011 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட செவிலிமேடு, தேனம்பாக்கம், நத்தப்பேட்டை மற்றும் ஓரிக்கை பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் நாளது வரை காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. ஆனால் அப்பள்ளிகளில் இம்மாநகராட்சி மூலமே பராமரிப்பு பணிகள் நாளது வரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே மேற்படி பள்ளிகள் மற்றும் அதில் செயல்படும் சத்துணவுக் கூடங்கள் அனைத்தையும் காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க இம்மாமன்றம் கோருகிறது.

52. காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட பிரதான சாலைகளான ராஜவீதி, காமராஜர் சாலை, காந்தி சாலை ஆகிய சாலையோரங்களில் உள்ள மழைநீர் வடிகால்வாயினை தூர்வாரி புதிதாக பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் நடைப்பாதை அமைத்து தர கோரி மாநில நெடுஞ்சாலைத்துறையை இம்மாமன்றம் கோருகிறது.

KANCHEEPURAM CORPORATION
காஞ்சிபுரம் மாநகராட்சி

53. பொன்னேரி (கோனேரிகுப்பம்) ஏரியினை புனரமைத்து பறவைகள் சரணாலயம் அமைக்க பொதுப்பணித் துறையையும் மற்றும் சுற்றுலா மேம்பாட்டு துறையையும் இம்மாமன்றம் கோருகிறது.

KANCHEEPURAM CORPORATION
காஞ்சிபுரம் மாநகராட்சி

## 54. சுற்றுலா மேம்பாடு மற்றும் போக்குவரத்து மேம்பாடு :-

அறிவிப்பு:- போக்குவரத்து மற்றும் சுற்றுலா மேம்படுத்துதல் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் 28.02.2025 அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஒருங்கிணைந்த கள ஆய்வு அறிக்கை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அரசின் நிதி உதவி பெற்று இந்து சமய அறநிலையத் துறை, சுற்றுலா மேம்பாட்டுத் துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து சுற் லா மேம்பாடு மற்றும் யாத்திரிகர்களுக்கு உரிய அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

## முடிவுரை

கடந்த சில ஆண்டுகளில் நிலுவையிலிருந்த ஓய்வூதியம் பணப் பயன்கள், மாதந்தோறும் செலுத்த வேண்டிய பணியாளர் சேமநல நிதி உள்ளிட்ட பங்களிப்பு ஓய்வூதிய நிதி, பணியாளர்களின் கூட்டுறவு சங்க பிடித்தம், வருமான வரி பிடித்தம், GST மற்றும் தொழிலாளர் நல வாரிய நிதி மற்றும் திட்டப் பணிகளுக்காக பெறப்பட்டுள்ள கடன்களுக்கு மாதந்தோறும் செலுத்த வேண்டிய தவணைத் தொகை உள்ளிட்ட அனைத்தையும் நிலுவையின்றி செலுத்தி வருவதோடு, வருவாய் ஈட்டுதல் மற்றும் பெருக்குதல் உள்ளிட்ட நடவடிக்கையில் திறம்பட செயலாற்றி உபரி பட்ஜெட் (Surplus Budget) தாக்கல் செய்வதில் இம்மாமன்றம் மகிழ்ச்சி கொள்வதுடன் இப்பணியில் தொடர்ந்து செயலாற்றி வருகின்ற அனைவரையும் பாராட்டி மகிழ்கிறது.

## 55. தலைவர், நிலைக்குழு (கணக்கு) அவர்களின் உரை

காஞ்சிபுரம் மாநகராட்சி வளர்ந்து வரும் மாநகர மக்களின் அடிப்படைத் தேவைகளை முன்னிறுத்தி, பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. மக்களின் தேவைகளைத் தொடர்ந்து செயல்படுத்தும் வண்ணம் 2025-2026 ஆம் நிதியாண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, செயல் திட்டங்கள் மற்றும் அவைகளுக்கான நிதி ஆதாரங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

## நிதி நிலை
## வருவாய் மற்றும் மூலதன நிதி

2025-2026 ஆம் நிதியாண்டில் வருவாய் கணக்கு தலைப்பில் வருவாய் வரவு ரூ.91.65 கோடியாகவும், வருவாய் செலவினம் ரூ.91.54 கோடியாகவும், மூலதன வரவு ரூ.161.45 கோடியாகவும், மூலதனச் செலவு ரூ.161.45 கோடியாகவும் இருக்கும்.

ஆக மொத்தம் வருவாய் கணக்கின் வரவுகள் 2025-2026 ஆம் நிதியாண்டில் ரூ.253.10 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2025-2026 ஆம் நிதியாண்டில் வருவாய் இனங்களின் செலவு ரூ.252.99 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## வருவாய் வரவினங்கள்

❖ சொத்து வரி:– 2025–2026 ஆம் நிதியாண்டில் இவ்வரி வருவாய் ரூ.16.56 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

❖ தொழில் வரி:– 2025–2026 ஆம் நிதியாண்டில் வரவு–செலவு திட்டத்தில் இவ்வரி வருவாய் ரூ.5.89 கோடியாக இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

KANCHEEPURAM CORPORATION
காஞ்சிபுரம் மாநகராட்சி

## அரசு ஒதுக்கீடு செய்யும் வருவாய்

- முத்திரைத்தாள் மீதான கூடுதல் வரி :- 2025–2026 ஆம் நிதியாண்டில் இவ்வினத்தின் வருவாய் ரூ.2.30 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

- மாநில நிதிக்குழு மானியம் :- 6–வது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், காஞ்சிபுரம் மாநகராட்சிக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், 2025–2026 ஆம் நிதியாண்டில், இவ்வினத்தின் வருவாய் ரூ.40.00 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## இதர வருவாய்

- 2025-2026 ஆம் நிதியாண்டில் இதர வருவாய் இனங்களின் மூலம் ரூ.26.90 கோடி இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

KANCHEEPURAM CORPORATION
காஞ்சிபுரம் மாநகராட்சி

## வருவாய் செலவினங்கள்

- ❖ பணியாளர் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் :- 2025-2026 ஆம் நிதியாண்டில், இத்தலைப்பின் கீழ் ரூ.37.00 கோடி செலவினம் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ நிர்வாகச் செலவு :- 2025-2026 ஆம் நிதியாண்டில், இத்தலைப்பின் கீழ் ரூ.3.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ❖ பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி செலவினங்கள் :- நடப்பு நிதியாண்டில் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினங்களுக்காக ரூ.9.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மின் கட்டணத்திற்கு ரூ.14.00 கோடியும், வாகனங்கள் பராமரிப்பு, எரிபொருள், பொதுசுகாதார தளவாட பொருட்கள் மற்றும் இதர செலவினங்களுக்கு ரூ.9.68 கோடியாகவும், தனியார் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ள ரூ.18.00 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ❖ கடனுக்கான வட்டி செலுத்துதல் :- 2025-2026 ஆம் நிதியாண்டில், இச்செலவினத்திற்கென ரூ.0.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மூலதன வரவுகள்

❖ 2025-2026 ஆம் நிதியாண்டில் மூலதன வரவு தலைப்பின் கீழ் ரூ.161.95 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## மூலதனச் செலவு

❖ காஞ்சிபுரம் மாநகராட்சி பல்வேறு துறைகள் மூலமாக மூலதனப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மூலதனப் பணிகளுக்காக 2025-2026 ஆம் நிதியாண்டில் ரூ.161.45 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## குடிநீர் மற்றும் வடிகால் நிதி

2025-2026 ஆம் நிதியாண்டில் குடிநீர் மற்றும் வடிகால் நிதி தலைப்பில் வருவாய் வரவு ரூ.28.71 கோடியாகவும், வருவாய் செலவினம் ரூ.28.86 கோடியாகவும், மூலதன வரவு ரூ.333.00 கோடியாகவும், பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கான கடனாக ரூ.45.34 கோடியாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆக மொத்தம் குடிநீர் மற்றும் வடிகால் நிதிக் கணக்கின் வருவாய் வரவுகள் மற்றும் மூலதன வரவுகள் 2025-2026 ஆம் நிதியாண்டில் ரூ.407.05 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2025-2026 ஆம் நிதியாண்டில் குடிநீர் மற்றும் வடிகால் நிதிக் கணக்கில் வருவாய் மற்றும் மூலதன செலவுகள் ரூ.406.70 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் வரவினங்கள்

சொத்து வரி தொகையில் குடிநீர் மற்றும் வடிகால் நிதி வரி, குடிநீர் கட்டணங்கள், புதை வடிகால் கட்டணங்கள், குடிநீர் மற்றும் வடிகால் இணைப்புக்கான வைப்புத் தொகை, பராமரிப்பு கட்டணம், வங்கி வட்டி வரவு, மூலதன பணிகளுக்காக அரசிடமிருந்து பெறும் மானியம், கடன் தொகை மற்றும் இதர வரவினங்கள் ரூ.407.05 கோடியாகவும் வருவாய் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் செலவினங்கள்

மாநகராட்சி பணியாளர்களின் ஊதியம், படிகள், ஓய்வுபெறும் பணியாளர்களுக்கான விடுப்பூதியம், எழுது பொருட்கள், மின் கட்டணங்கள், தொலைபேசி கட்டணங்கள், வாகன பராமரிப்பு செலவுகள், மூலதன பணிகளான புதை வடிகால் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டம் மற்றும் இதர மூலதன பணிகளுக்கான செலவினங்கள், கடன் மற்றும் வட்டித் தொகை மற்றும் இதர செலவினங்கள் ரூ.406.70 கோடியாக செலவினம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கல்வி நிதி

2025–2026 ஆம் நிதியாண்டில் கல்வி நிதி தலைப்பில் வருவாய் வரவாக ரூ.5.04 கோடியாகவும், மூலதன வரவாக ரூ.8.00 கோடியாகவும் ஆக மொத்தம் வருவாய் ரூ.13.04 கோடியாகவும், வருவாய் செலவினம் ரூ.4.65 கோடியாகவும், மூலதன செலவினம் ரூ.8.00 கோடியாகவும் ஆக மொத்தம் செலவினம் ரூ.12.65 கோடியாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2025–2026 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ள மூலதன திட்டங்கள்

- **சாலைகள் :–** தமிழ்நாடு அரசின் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர அரசின் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் சாலைப் பணிகளுக்காக ரூ.3200.00 இலட்சம் நிதி கோரப்பட்டுள்ளது.

❖ **பாலங்கள் :–** தாட்டித்தோப்பு – முருகன் குடியிருப்பு பாலம் மற்றும் காவலன் கேட்– உத்திரமேரூர் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் பாலங்களுக்கு அணுகு சாலை (Approach Road) அமைக்க ரூ.450.00 இலட்சத்திற்கு அரசின் நிதி கோரப்பட்டுள்ளது.

❖ **கட்டடம் :–** மாநகராட்சியின் புதிய அலுவலக கட்டத்திற்கும், அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்திற்கும் கூடுதல் பணிகளுக்காக தலா ரூ.1000.00 இலட்சம் வீதம் ரூ.2000.00 இலட்சம் அரசின் நிதி கோரப்பட்டுள்ளது.

❖ **மின்சாரம் :–** மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கும் புதியதாக LED மின் விளக்குகள் அமைக்க ரூ.200.00 இலட்சம் அரசின் நிதி கோரப்பட்டுள்ளது.

❖ **கல்வி** :– மாநகராட்சிக்கு சொந்தமான அனைத்து பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.1200.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **சுகாதாரம்** :– மாநகராட்சிப் பகுதி முழுவதும் சுகாதாரத்தினை மேம்படுத்தும் விதமாக சுகாதார பணிகளுக்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்தல், மாநகரில் உள்ள தெரு நாய்களை கட்டுப்படுத்தல், மற்றும் கொசு ஒழிப்பு பணிகளுக்கு ரூ.710.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **சிறப்பு திட்டங்கள்** :– உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி, மாநகராட்சி பங்களிப்பு (உலக வங்கி நிதி) திட்டம் போன்ற பல்வகை அரசின் நிதி ஆதாரங்களை கொண்டு மூலதனப் பணிகளை மேற்கொள்ள ரூ.3500.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ **பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் :-** மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்களை வெளிப்புற உதவிகள் திட்டம் (KfW) மற்றும் பொது மக்கள் பங்களிப்புடன் (PPP) மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.499.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **நீர்நிலைகள் மேம்பாடு :-** மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளான ஏரிகள் மற்றும் குளங்களை புனரமைத்து மாநகரப் பகுதியில் நீர்வளத்தினை மேம்படுத்தும் பணிகளுக்கு ரூ.416.90 இலட்சம் அரசின் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

## 2025-2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் கண்ணோட்டம்

(ரூ. கோடியில்)

| நிதி | வருவாய் மற்றும் மூலதன நிதி | குடிநீர் மற்றும் வடிகால் நிதி | கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வரவினங்கள் | 253.10 | 407.06 | 13.04 | 673.2 |
| செலவினங்கள் | 252.99 | 406.70 | 12.65 | 672.34 |
| உபரி | 0.11 | 0.36 | 0.39 | 0.86 |

## முடிவுரை

பயனுள்ள இந்த நிதிநிலை அறிக்கையினை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய எனக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை மேயர் அவர்களுக்கும், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த நிதிநிலை அறிக்கையை நல்ல முறையில் வடிவமைத்துக் கொடுத்த ஆணையாளர் அவர்களுக்கும், அனைத்து பிரிவு அலுவலர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்